Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 197 | உள்ளூர் - 16.07.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 197 | வெளியூர் - 17.07.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**கேபி ஜோதிடம்: 4 ஆம் பாவம் தரும் சாதக பாதக பலன்கள்!**

**பேங்க் ஆஃப் இந்தியா: 779 பணியிடங்கள்!**

**டி20 உலகக் கோப்பை: அதிரடி மாற்றம்!**

**ஜூலை 17-ல் வானில் அரிய அதிசயம்!**

# அரசு மருத்துவ காப்பீடு: ரூ.5 லட்சம் காப்பீடு ரூ.10 லட்சமாக உயருமா?




புதுடெல்லி, ஜூலை 16–
ஏழை, எளிய மக்களுக்கு இலவச சிகிச்சை வழங்கும் ஆயுஷ்மான் பாரத் (PM–JAY) மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் காப்பீட்டு வரம்பை ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.10 லட்சமாக உயர்த்த நாடாளுமன்ற நிலைக்குழு மத்திய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, இதய அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை உள்ளிட்ட உயர்செலவு சிகிச்சைகளுக்கு தற்போதைய காப்பீட்டு தொகை போதுமானதாக இல்லாததால் இந்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும், சிகிச்சை அனுமதியை 6 மணி நேரத்திற்குள் வழங்கவும், ஏஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்தவும் குழு வலியுறுத்தியுள்ளது.

இந்த பரிந்துரையை மத்திய அரசு ஏற்றால், கோடிக்கணக்கான குடும்பங்களுக்கு மருத்துவச் செலவில் பெரிய நிதி பாதுகாப்பு கிடைக்கும்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையில் தலைமைச் செயலகத்தில், இரண்டாவது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

# இந்தியா – பிரிட்டன்

# வர்த்தகத்தில் வரலாற்று ஒப்பந்தம்! 99% இந்திய பொருட்களுக்கு

## பிரிட்டனில் பூஜ்ஜிய வரி!





புதுடெல்லி, ஜூலை. 16–
இந்தியா – இங்கிலாந்து இடையிலான விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (CETA) அதிகாரப்பூர்வமாக அமலுக்கு வந்துள்ளது. இதன் மூலம் இரு நாடுகளின் பொருளாதார, வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகள் புதிய கட்டத்தை எட்டியுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவில் தயாரிக்கப்படும் 99 சதவீத ஏற்றுமதி பொருட்கள் இங்கிலாந்து சந்தையில் சுங்கவரி (Zero Duty) இன்றி நுழைய வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனால் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிப்பதோடு, உள்நாட்டு உற்பத்தியாளர்கள், விவசாயிகள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) பெரிதும் பயனடைவார்கள் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வர்த்தக ஒப்பந்தம் அமலுக்கு வந்ததை "வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம்" என்று குறிப்பிட்ட பிரதமர் மோடி, இது இரு நாடுகளின் பொருளாதார உறவை மேலும் ஆழப்படுத்தும் என்றும், தொழில்நுட்பம், தொழில்முறை சேவைகள், புதுமை, முதலீடு, கல்வி மற்றும் திறன் மேம்பாடு போன்ற துறைகளில் புதிய ஒத்துழைப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் கூறினார். இரு ஜனநாயக நாடுகளும் நீண்டகால வளர்ச்சியை நோக்கி இணைந்து செயல்படும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், இந்த ஒப்பந்தம் இந்தியாவின் உலகளாவிய வர்த்தக வளர்ச்சியில் முக்கிய மைல்கல்லாக அமையும் என்றார். இந்தியா – இங்கிலாந்து இடையிலான மொத்த வர்த்தகத்தின் பெரும்பகுதியை இந்த ஒப்பந்தம் உள்ளடக்கியுள்ளதால், ஏற்றுமதி, முதலீடு மற்றும் வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்படும் என அவர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜவுளி, தோல் பொருட்கள், ஆடை, ரத்தினம் மற்றும் நகைகள், பொறியியல் பொருட்கள், கடலுணவுகள், வேளாண் மற்றும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல இந்திய தயாரிப்புகளுக்கு இங்கிலாந்தில் புதிய சந்தை வாய்ப்புகள் உருவாகும். அதே நேரத்தில், இந்தியாவில் புதிய முதலீடுகள் அதிகரித்து, உற்பத்தித் துறை மற்றும் வேலைவாய்ப்பும் விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா – இங்கிலாந்து வர்த்தக உறவில் புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ள இந்த ஒப்பந்தம், இரு நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதோடு, இந்தியாவின் உலகளாவிய வர்த்தக நிலையை மேலும் உயர்த்தும் முக்கிய நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

# செமிகண்டக்டர், செல்போன் உற்பத்திக்கு ரூ.1.9 லட்சம் கோடி ஊக்கம்!




புதுடெல்லி, ஜூலை. 16–
இந்தியாவில் செமிகண்டக்டர், செல்போன் மற்றும் மின்னணு உற்பத்தியை உலகத் தரத்தில் வளர்க்கும் நோக்கில், ரூ.1.9 லட்சம் கோடி மதிப்பிலான ஊக்கத் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிதி மூலம் உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு, புதிய தொழிற்சாலைகள் அமைத்தல், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குறிப்பாக, இந்தியாவை உலகளாவிய எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மையமாக மாற்றும் இலக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் மூலம் இறக்குமதி சார்பு குறைந்து, ஏற்றுமதி அதிகரிப்பதுடன், லட்சக்கணக்கானோருக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. பிரதமர் தலைமயில் நடைபெற்ற கூட்டத்திற்கு பின் மத்திய அமைச்சர் செய்தியாளர்களிடம் இந்த திட்டம் பற்றி வீவரித்தார்.

# வங்கதேசத்தில் உதயமான 'பிராய்லர் சிக்கன்' கட்சி!



புதுடெல்லி, ஜூலை. 16–
வங்கதேசத்தில் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு நிலவியபோதும், உயர்நிலைப் பொதுத்தேர்வுகளை திட்டமிட்டபடி நடத்த அரசு முடிவு செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட வர்களை கல்வித்துறை அமைச்சர் "பிராய்லர் கோழிகள்" என்று விமர்சித்ததாக தகவல் வெளியானது.

இதற்கு பதிலடியாக, போராட்டக்காரார்கள் சமூக ஊடகங்களில் "பிராய்லர் சிக்கன் கட்சி" (Broiler Chicken Party)என்ற பெயரில் இயக்கத்தைத் தொடங்கினர். கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையுடன் இந்த இயக்கம் வேகமாக பரவி வருகிறது. தொடங்கப்பட்ட ஒரே நாளில் அந்த முகநூல் பக்கத்தை 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பின்தொடர்ந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் இந்த எதிர்ப்பு இயக்கம் தற்போது வங்கதேசம் முழுவதும் பேசுபொருளாக மாறியுள்ளதுடன், சமூக ஊடகங்களில் அதன் பதிவுகள் வைரலாகப் பகிரப்பட்டு வருகின்றன.

# பார்லிமென்டில் ஸ்மார்ட் சாதனங்களுக்கு 'நோ'!




புதுடெல்லி, ஜூலை. 16–
மழைக்கால நாடாளுமன்றக் கூட்டத்தொடரை முன்னிட்டு, எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஸ்மார்ட் வாட்ச், ஸ்மார்ட் கண்ணாடி, பென் கேமரா உள்ளிட்ட இணைய வசதி கொண்ட அணியக்கூடிய மின்னணு சாதனங்களை பயன்படுத்த வேண்டாம் என்று மக்களவைச் செயலகம் அறிவு றுத்தியுள்ளது. இந்த சாதனங்கள் மூலம் பாதுகாப்பு, ரகசிய தகவல் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளின் தனியுரிமை பாதிக்கப்பட வாய்ப்பு இருப்பதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்ப ட்டுள்ளது. குறிப்பாக, கூட்ட அரங்குகள் மற்றும் முக்கிய பகுதிகளில் இத்தகைய சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# ஓடிடி தளங்களுக்கு தணிக்கை!



சென்னை, ஜூலை. 16–
திரைப்படங்கள் மற்றும் இணையத் தொடர்களை வெளியிடும் OTT தளங்களை மத்திய திரைப்படத் தணிக்கை வாரியத்தின் (CBFC) கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர மத்திய அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது. இதற்காக தகவல் தொழில்நுட்ப (IT) விதிகளில் திருத்தம் செய்யும் நடவடிக்கையும் பரிசீலனையில் உள்ளது. புதிய விதிகள் அமலுக்கு வந்தால், திரையரங்குகளில் வெளியாகும் படங்களைப் போலவே OTT–யில் வெளி யாகும் திரைப்படங்களும் தணிக்கை வாரியத்தின் சான்றிதழ் பெற்ற பிறகே வெளியிடப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பு மற்றும் ஆட்சேபனைக்குரிய உள்ளடக்கங்கள் தொடர்பான சர்ச்சைகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையை அரசு பரிசீலித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 16.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 32-ம் தேதி

## தொடர்ந்து உயரும் விலைவாசி!




பல மாதங்களாக 4 சதவீதத்திற்குள் இருந்த சில்லறை பணவீக்கம், ஜூன் மாதத்தில் 4.38% ஆக உயர்ந்துள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் விலை உயர்ந்த உலோகங்களின் விலை அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

ஜூன் மாதத்தில் தக்காளி (31.92%), இஞ்சி (50.41%), வெங்காயம் ஆகிய காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்ததால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் வெள்ளி நகைகளின் பணவீக்கம் 133%, தங்கம், வைரம், பிளாட்டினம் நகைகளின் பணவீக்கம் 36.82% ஆக பதிவாகியுள்ளது.

உணவகங்கள், தங்கும் விடுதிகள், உணவுப் பொருட்கள் மற்றும் குளிர்பானங்களின் விலையும் உயர்ந்துள்ளதால் குடும்பச் செலவுகள் மேலும் அதிகரித்துள்ளன. இருப்பினும் உருளைக்கிழங்கு (20.34%), பட்டாணி (9.67%), சீரகம் (3.75%) ஆகியவற்றின் விலையில் குறைவு ஏற்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வு தொடர்வதால், நடுத்தர மற்றும் ஏழை மக்களின் குடும்ப பட்ஜெட் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த பணவீக்க உயர்வு தற்காலிகமானதா அல்லது நீடிக்குமா என்பது ஆகஸ்ட் 5–ஆம் தேதி நடைபெறும் ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கைக் கூட்ட முடிவுக்குப் பிறகே தெளிவாகும்.

**முக்கிய அம்சங்கள்:**

சில்லறை பணவீக்கம்: 4.38%
தக்காளி விலை: +31.92%
இஞ்சி விலை: +50.41%
வெள்ளி நகை பணவீக்கம்: +133%
விலை குறைந்தவை: உருளைக்கிழங்கு, பட்டாணி, சீரகம்.

## ஈரானின் பாலங்களை தகர்க்க அமெரிக்கா முடிவு?




பென்சில்வேனியா, ஜூலை. 16–

ஈரானில் உள்ள பாலங்களை குண்டுகளை வீசி தகர்க்க போவது பற்றி தகவல் வெளியானது. இதனால் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து, பென்சில்வேனியா மாகாணத்திற்கு வந்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பிடம் செய்தியாளர்கள் இதுதொடர்பாக கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதில் அளித்து பேசும்போது, எங்களுடன் அமைதி பேச்சுவார்த்தைக்கு ஈரான் மீண்டும் திரும்ப வேண்டும். அப்படி இல்லையெனில், அடுத்த வாரம் ஈரானின் எல்லை பகுதிகளை தாக்கும் ஒரு பகுதியாக அதன் அணு உலைகள் மற்றும் பாலங்களை இலக்காக கொண்டு தாக்குதல்கள் நடத்தப்படும் என்றார். அமெரிக்காவுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் ஒன்றை அவர்கள் ஏற்படுத்தி கொள்ள வேண்டும். ஈரான் அதனை செய்ய தவறினால், அந்நாட்டில் ஒருவரும் மீதம் இருக்கமாட்டார்கள் என்று டிரம்ப் எச்சரித்தும் உள்ளார். ஈரானை நாளை இரவு கடுமையாக தாக்க போகிறோம் என்றும் டிரம்ப் கூறியுள்ளார்.

இதனால், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய்யின் விலையில் ஏற்ற இறக்கம் ஏற்பட கூடிய சாத்தியமும் அதிகரித்து காணப்படுகிறது.

## ரெயில் டிக்கெட் முன்பதிவை எளிமைப்படுத்தும் வகையில் மேம்படுத்தப்பட்ட ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் அறிமுகம்!




சென்னை, ஜூலை. 16–


24 ஆண்டுகளுக்குப் பிறகு பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ள ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பயணிகள் சிரமம் இல்லாமல் எளிதில் முன்பதிவு செய்யும் வகையில் மேம்படுத்தப்பட்ட இணையதளத்தின் பீட்டா பதிப்பை ஐ.ஆர்.சி.டி.சி. தற்போது அறிமுகம் செய்துள்ளது.

இந்த புதிய பீட்டா பதிப்பு, டிக்கெட் முன்பதிவை எளிமையாகவும், தடையின்றியும் செய்வதை நோக்கமாக கொண்டு 4 முக்கிய மேம்பாட்டு அம்சங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

முன்பதிவு செய்யும்போது தேவையற்ற கேப்ட்சாக்களை நீக்குதல், தேவையற்ற பாப்–அப்களை அகற்றுதல், ஒளிரும் கிராபிக்ஸ், கவனச்சிதறல்களை ஏற்படுத்தும் அம்சங்கள் நீக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைத்து வகுப்புகளிலும் இருக்கைகள் உள்ளதா என்பதைப் பார்க்கலாம். இந்த இணையதளம் வேகமான செக்–அவுட் செயல்முறையை வழங்குகிறது. இதன் மூலம் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய தேவைப்படும் படிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது. இந்த இணையதளம் பயணிகளின் விவரங்களைச் சேமிக்கும். இதன் மூலம் மீண்டும் மீண்டும் முன்பதிவு செய்வது எளிதாகிறது.

இந்த பீட்டா பதிப்பை https://www.irctc.co.in/eticket/ என்ற முகவரியில் அணுகலாம். தற்போதுள்ள இணையதளத்தின் முகப்புப் பக்கத்திலும் பீட்டா பதிப்பிற்கான இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் எளிமைப்படுத்தப்பட்ட அம்சங்கள் குறித்துக் கருத்துக்களை வழங்குமாறு ரெயில்வே அமைச்சகம் பயனர்களை கேட்டுக் கொண்டுள்ளது.

## பழனி கோயில் நில மோசடி வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றம்!






பழனி, ஜூலை. 16–

பழனி மலையடிவாரத்தில் உள்ள பழனி தண்டாயுதபாணி சுவாமி மடத்திற்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்புள்ள 1.40 ஏக்கர் நிலத்தை, நீதிமன்ற உத்தரவுகளை மீறித் தனிநபர்களுக்கு முறைகேடாகப் பத்திரப்பதிவு செய்து கொடுத்த வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றத் தமிழக அரசு இன்று உத்தரவிட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மலையடிவாரத்தில் ரூ.100 கோடி மதிப்பிலான 1.40 ஏக்கர் நிலம் உள்ளது.

1888 ஆம் ஆண்டின் ஒப்பந்தப்படி கோயிலின் பராமரிப்பு மற்றும் ஆன்மீகப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டதாகும். இந்த இடத்தை விற்கவோ, வேறு நபர்களுக்கு மாற்றவோ சட்டப்படி அனுமதி யாருக்கும் இல்லை.

கோயில் நிர்வாகம் இந்த இடத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டு, பக்தர்களுக்காக இலவச வாகன நிறுத்தும் இடமாக பயன்படுத்தி வந்தது.

இந்நிலையில், இந்த நிலத்திற்குச் சம்பந்தமில்லாத தனியார் அறக்கட்டளையைச் சேர்ந்த முருகதாஸ், திருப்புகழ் ஆகியோர் தங்களைப் பொறுப்பாளர்கள் எனக் கூறிக்கொண்டு, கடந்த ஜூலை 6–ஆம் தேதியன்று வெள்ளைதுரை, சேதுபதி ஆகிய இரு நபர்களுக்கு இந்த நிலத்தை வெறும் ரூ.2 கோடிக்குக் கிரயம் செய்து விற்றுள்ளனர்.

பழனி சார்பதிவாளர் விடுமுறையில் இருந்த சமயம் பார்த்து, கொடைக்கானல் சார்பதிவாளராகப் பணியாற்றி வந்த ஜஸ்டின் மணிகண்டன் என்பவருக்குப் பழனி சார்பதிவாளர் அலுவலகக் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டது.

அவர் பொறுப்பேற்ற ஒரே நாளில் தகுதியில்லாத போலி ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ரூ.100 கோடி மதிப்புள்ள நிலத்தை அவசர அவசரமாகப் பதிவு செய்துள்ளார்.

மோசடி வெளிச்சத்திற்கு வந்ததும், கோயில் நிர்வாகம் அளித்த புகாரின் பேரில் சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் உட்பட 4 பேர் மீது 5 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர்.

அதனைத் தொடர்ந்து, முறைகேட்டில் ஈடுபட்ட சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டனை தற்காலிகப் பணியிடை நீக்கம் செய்ய பதிவுத்துறை ஐஜி உத்தரவிட்டார். தற்போது அந்தப் பத்திரப்பதிவு ஆவணங்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கை இன்று விசாரித்த உயர் நீதிமன்ற மதுரை கிளை, பழனி கோயிலுக்குச் சொந்தமான ரூ.100 கோடி நிலத்தை முறைகேடாகப் பத்திரப்பதிவு செய்தது முற்றிலும் செல்லாது என அறிவித்து தீர்ப்பளித்துள்ளது.

இந்த மோசடியின் பின்னணியில் பெரிய அளவிலான சதி மற்றும் பல முக்கியப் புள்ளிகளுக்குத் தொடர்பு இருக்கலாம் எனப் புகார்கள் எழுந்தன.

இது தொடர்பாக பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பட்ட நிலையில், வழக்கின் தீவிரத்தன்மை மற்றும் பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்து சம்பந்தப்பட்டிருப்பதால், முறையான மற்றும் தீவிரமான விசாரணைக்காகத் தற்பொழுது சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றித் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.


## சி.வி. சண்முகத்தின் ஆதரவாளர்கள் 11 பேரின் கட்சிப் பொறுப்புகள் பறிப்பு!



சென்னை, ஜூலை. 16–

விழுப்புரம் மாவட்ட புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட பசுபதி தரப்பினருக்கும், சி.வி.சண்முகம் தரப்பினருக்கும் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. இந்த சூழலில் கடந்த 9–ம் தேதி நடந்த விழுப்புரம் அதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பசுபதி ஆதரவாளர்களுக்கும், சி.வி.சண்முகம் ஆதரவாளர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. கார் மீது கல்வீச்சு, மறியல் போராட்டம் நடந்தது. இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இதையடுத்து இதுதொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நடவடிக்கை எடுத்துள்ளார். அதன்படி, விழுப்புரம் மாவட்டத்தில் சி.வி. சண்முகத்தின் ஆதரவாளர்கள் 11 பேரை கட்சி பொறுப்பிலுருந்து நீக்கி பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

## குழந்தைகளுக்கான காய்ச்சல் மருந்துகளில் ஆல்கஹால்?



சென்னை, ஜூலை. 16–

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் பாராசிட்டமால் மருந்துகளில் ஆல்கஹாலின் அளவு குறித்த குற்றச்சாட்டுக்கு தமிழக சுகாதாரத் துறை மறுப்பு தெரிவித்துள்ளது.

அரசு மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பாராசிட்டமால் மருந்துகளில் ஆல்கஹால் அளவு அதிகளவில் கலக்கப்படுவதாகப் புகார் எழுந்தது.

அரசு மருத்துவமனைகளில் குழந்தைகளின் காய்ச்சலுக்கு வழங்கப்படும் பாராசிட்டமால் மருந்துகளில் ஆல்கஹால் அளவு 90 சதவிகிதம் இருப்பதாகவும், டாஸ்மாக்கைவிட அரசு மருத்துவமனையின் மருந்துகள் மிகுந்த போதைப்பொருளாக இருப்பதாக யூடியூபர் ஒருவர் குற்றம் சாட்டியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, யூடியூபரின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு தெரிவித்த தமிழக சுகாதாரத் துறை, அதற்கான விளக்கமும் அளித்துள்ளது.

இதுகுறித்து சுகாதாரத் துறை தரப்பில் கூறியதாவது, "பாராசிட்டமால் மருந்தைக் கரைப்பதற்காக ஆல்கஹால் பயன்படுத்தப்படுவது வழக்கமான ஒன்றுதான். மருந்துகளில் ஆல்கஹாலின் அளவு 10 சதவிகிதம் என்ற அளவில்தான் இருக்கும். 60 மி.லி. அளவுகொண்ட மருந்தில் 6 மி.லி. என்ற அளவில்தான் ஆல்கஹால் இருக்கும். மீதமிருக்கும் 54 மி.லி. மருந்தின் தன்மையாக இருக்கும். மேலும், ஆல்கஹாலின் தூயத் தன்மைதான் 95 சதவிகிதம் என்று அச்சிடப்பட்டிருக்கும்.

அரசு மருத்துவமனைகளில் குறிப்பாக குழந்தைகளுக்கு வழங்கப்படும் மருந்துகளில் ஆல்கஹால் மற்றும் மூலப்பொருள்கள் அனைத்துமே சரியான அளவினைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. பொதுமக்களிடையே தவறான தகவல்களை வதந்தி பரப்ப வேண்டாம். அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருந்துகளின் தரத்தை விமர்சிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று எச்சரித்துள்ளது.

## தமிழகத்துக்கு காவிரி நீர் கிடையாது: கர்நாடகம்!




புதுடெல்லி, ஜூலை. 16–

தமிழகத்துக்கு காவிரி நீரைத் திறந்துவிட முடியாது என காவிரிநீர் ஒழுங்குமுறைக் கூட்டத்தில் கர்நாடக அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

தில்லியில் உள்ள காவிரிநீர் மேலாண்மை ஆணைய அலுவலகத்தில் காவிரிநீர் ஒழுங்குமுறைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழகம் மற்றும் கர்நாடகத்தை சேர்ந்த அதிகாரிகள் காணொலி வாயிலாக கலந்து கொண்டனர். இதில், உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி தமிழகத்துக்கான காவிரிநீர் திறக்கப்பட வேண்டும் என தமிழக அரசு வலியுறுத்தியது. இதனைத் தொடர்ந்து, கர்நாடக அரசின் அதிகாரிகள் கூறியதாவது, கர்நாடகத்தில் ஜூன் மாதத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யாததால், அணைகளில் தண்ணீர் வரத்தும் இல்லை. ஜூலை மாதத்தில் சில இடங்களில் மட்டுமே மழை பெய்ததால், அணையில் குறைந்தளவிலேயே தண்ணீர் சேமிக்கப்பட்டுள்ளது. மேலும், பருவமழை தொடங்குவதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை; அணைகளிலும் நீர் சேமித்து வைக்கப்படவில்லை. கர்நாடகம் இதற்கு முன்பு காணாத மழைப் பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது. காவிரி படுகைகளில் கடுமையான பற்றாக்குறை நிலவி வருவதால், தமிழகத்துக்கு நீர் திறந்து விட முடியாது என்று தெரிவித்தனர்.

இதனிடையே, காவிரி நீரைத் திறக்க வலியுறுத்தி கர்நாடக மாநில எல்லையை நோக்கி பேரணியில் ஈடுபட்ட தமிழக விவசாயிகள் 100–க்கும் மேற்பட்டோர் புதன்கிழமையில் (ஜூலை 15) கைது செய்யப்பட்டுள்ளனர்.



## சினிமா துளிகள்..!

## சென்னையில் புதிய வீடு வாங்கிய சுருதி ஹாசன்!



நடிகை சுருதி ஹாசன், சென்னை நகரில் புதிய சொகுசு வீட்டை வாங்கியுள்ளார். சென்னை மற்றும் மும்பை இடையே தொடர்ந்து பயணம் செய்து வரும் அவர், குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவிடும் வகையில் இந்த வீட்டை தேர்வு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த தகவல் ரசிகர்கள் மத்தியில் பேசுபொருளாகியுள்ளது.



## கேபி ஜோதிடம்: 4 ஆம் பாவம் தரும் சாதக பாதக பலன்கள்!




கேபி (KP) ஜோதிட முறையில் 4ஆம் பாவத்தின் உபநட்சத்திர அதிபதி எந்தெந்த பாவங்களுடன் தொடர்பு கொள்கிறது என்பதே, அந்த ஜாதகரின் வாழ்க்கையில் ஏற்படும் பலன்களை தீர்மானிக்கும் முக்கிய அம்சமாக கருதப்படுகிறது. வீடு, நிலம், வாகனம், தாய், கல்வி, மனநிம்மதி மற்றும் உடல்நலம் போன்றவற்றை 4ஆம் பாவம் குறிக்கிறது. இந்தப் பாவம் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு பாவமும் தனித்தனி பலன்களை வழங்கும் என்பது கேபி ஜோதிடத்தின் சிறப்பாகும்.

4ஆம் பாவம் 3, 7, 11ஆம் பாவங்களுடன் தொடர்பு கொண்டால், சுறுசுறுப்பான குணம், தனித்திறன், புரிந்து படிக்கும் ஆற்றல், உலக அறிவு மற்றும் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தாயை விட்டு தூரத்தில் வாழும் சூழல் உருவாகலாம். வாழ்க்கையில் எதிர்பாராத பிரச்சினைகள் வந்தாலும் அவற்றிலிருந்து விரைவாக மீண்டு வரக்கூடிய மனவலிமை கிடைக்கும்.

1, 5, 9ஆம் பாவங்களின் தொடர்பு இருந்தால் ஆன்மிக சிந்தனை, இறையருள், மன அமைதி மற்றும் நல்ல குணங்கள் அதிகரிக்கும். கல்வியில் புரிந்துகொள்ளும் திறன் சிறப்பாக இருந்தாலும், சொத்து சேர்ப்பதில் அல்லது பொருளாதார வளர்ச்சியில் அதிக ஆர்வம் இருக்காமல் இருக்கலாம்.

2, 4, 6, 10ஆம் பாவங்களின் தொடர்பு தொழில், வேலை, பொறுப்புணர்வு மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு சாதகமாக அமையும். கட்டுமானம், கல்வி, வாகனம், உற்பத்தி, நிர்வாகம் போன்ற துறைகளில் நிலையான வளர்ச்சி கிடைக்கும். குடும்ப வாழ்க்கையிலும் நிலைத்தன்மை காணப்படும்.

8 மற்றும் 12ஆம் பாவங்களின் தொடர்பு ஏற்பட்டால் உடல்நலத்தில் கவனம் தேவை. உடல் பருமன், நீரிழிவு, சுவாசக் கோளாறுகள், நீண்டகால நோய்கள் போன்றவை ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கலாம். மேலும், வீடு, சொத்து, தொழில் அல்லது குடும்பம் தொடர்பாக தடை, இழப்பு, மனஅழுத்தம் போன்ற சவால்களும் உருவாகலாம்.

அதே நேரத்தில், லக்னம் 3, 7, 11ஆம் பாவங்களுடன் வலுவாக தொடர்பு கொண்டிருந்தால், மேலே கூறப்பட்ட பாதிப்புகளின் தீவிரம் குறைந்து, வாழ்க்கையில் மீண்டு முன்னேறும் சக்தி கிடைக்கும். ஆயுள் பலம், மன உறுதி மற்றும் சவால்களை சமாளிக்கும் திறன் அதிகரிக்கும்.

மொத்தத்தில், கேபி ஜோதிடத்தில் 4ஆம் பாவம் எந்த பாவங்களுடன் தொடர்பு கொள்கிறது என்பதை ஆராய்வதன் மூலம் கல்வி, தாய், வீடு, நிலம், வாகனம், உடல்நலம், மனநிலை, தொழில் மற்றும் வாழ்க்கை முன்னேற்றம் போன்ற பல முக்கிய அம்சங்களை துல்லியமாக மதிப்பிட முடியும் என்று இந்த ஜோதிட முறை வலியுறுத்துகிறது.

## ஆந்திராவை தொடர்ந்து கர்நாடகத்திலும் கொரோனா வைரஸ் பாதிப்பு!



பெங்களூரு, ஜூலை. 16–

ஆந்திராவை தொடர்ந்து கர்நாடகத்திலும் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது. கடந்த மாதம் (ஜூன்) 14 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டது. இந்த மாதம் பாதி முடிவடைவதற்குள் 32 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 193 பேருக்கு பரிசோதனை செய்ததில் 32 பேருக்கு பாதிப்பு இருப்பது தெரியவந்துள்ளது. கர்நாடகத்தில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவ தொடங்கி உள்ளதால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து சுகாதாரத்துறை கமிஷனர் குருதத்த ஹெக்டே கூறுகையில், கர்நாடகத்தில் கண்டறியப்பட்ட பாதிப்புகள் தீவிரமானவை அல்ல. சுகாதாரத்துறை நிலைமையை நாள்தோறும் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றார்.

## கூடங்குளம் அணுமின் நிலைய ரகசிய ஆவணங்கள் கசிவு?




கூடங்குளம், ஜூலை. 16–

'வேர்ல்டு லீக்ஸ்' என்ற ஹேக்கர் குழு கூடங்குளம் அணுமின் நிலையத்தின் வரைபடங்கள் மற்றும் உதிரி பாகங்கள் வினியோகிப்பாளர் விவரங்கள் அடங்கிய ரகசிய ஆவணங்களை இணையதளம் மூலம் பொதுவெளியில் வெளியிட்டுள்ளதாக தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தியது. அதே நேரத்தில் இந்த தகவலை தேசிய அணுசக்தி ஆணையம் மறுத்து உள்ளது.

இருப்பினும் இந்தியாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமான கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பான ரகசிய ஆவணங்கள் கசிந்ததாக வெளியான தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




## 50 வயசிலும் 25 வயது ஃபிட்னஸ் வேண்டுமா?




40 வயதிற்கு பிறகு ஹார்மோன் மாற்றம், வளர்சிதை மாற்றம் குறைதல், தசை நிறை குறைதல் போன்ற காரணங்களால் உடல் எடை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. இதை கட்டுப்படுத்த சரியான உணவு, தினசரி உடற்பயிற்சி, போதிய தூக்கம் மற்றும் மனஅழுத்த மேலாண்மை அவசியம்.

காய்கறி, கீரை, முழுதானியங்கள், பழங்கள், புரதச்சத்து நிறைந்த உணவுகளை அதிகம் சேர்க்க வேண்டும். எண்ணெய், சர்க்கரை, துரித உணவுகள் மற்றும் குளிர்பானங்களை குறைப்பது நல்லது. தினமும் 3045 நிமிடங்கள் நடைப்பயிற்சி அல்லது உடற்பயிற்சி செய்வதுடன், வாரத்தில் 23 நாட்கள் தசை வலுப்படுத்தும் பயிற்சிகளையும் மேற்கொள்ளலாம்.

தியானம், யோகா, 78 மணி நேர தூக்கம், போதுமான தண்ணீர் குடித்தல் மற்றும் ஆண்டுதோறும் உடல்நல பரிசோதனை மேற்கொள்வது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். சிறிய ஆரோக்கியமான பழக்கங்களை தொடர்ந்து கடைபிடித்தால், 50 வயதிலும் 25 வயது போன்ற உடல் தகுதியை பராமரிக்க முடியும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

# Sea of Azov: 116 கப்பல்கள் மீது உக்ரைன் தாக்குதல்.. ரஷியாவின் கப்பல் போக்குவரத்து முடக்கம் - ஏற்றுமதி பாதிப்பு!



உக்ரைன், ஜூலை. 16–

உக்ரைனின் டிரோன் தாக்குதலால் அசோவ் கடலில் ரஷியாவின் கப்பல் போக்குவரத்து முடங்கியுள்ளது. அசோவ் கடல் என்பது ரஷியா மற்றும் உக்ரைன் எல்லைகளுக்கு நடுவே அமைந்துள்ள, கெர்ச் நீரிணை வழியாகக் கருங்கடலுடன் இணையும் ஒரு கடலாகும்.

இந்நிலையில் உக்ரைனின் தொடர் டிரோன் தாக்குதல்களால் டான் அசோவ் கால்வாய் மற்றும் கெர்ச் நீரிணை வழியாக செல்லும் ரஷ்யக் கப்பல்களின் இயக்கம் முழுமையாக நிறுத்தப்பட்டு ள்ளது. செயற்கைக்கோள் படங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத் தரவுகள் இதை உறுதிப்படுத்தியுள்ளன.

கடந்த 9 நாட்களில் மட்டும் அசோவ் கடல் பகுதியில் ரஷியாவுக்கு சொந்தமான 116 கப்பல்களை உக்ரைனிய டிரோன்கள் குறிவைத்து தாக்கியுள்ளதாக உக்ரைனின் டிரோன் படைப்பிரிவுத் தளபதி ராபர்ட் ப்ரோவ்டி தெரிவித்துள்ளார். ரஷியாவின் போர்க்கப்பல்கள் மட்டுமின்றி, சரக்குக் கப்பல்களும் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளன.

ரஷியாவின் எண்ணெய், கோதுமை, சூரியகாந்தி எண்ணெய், எஃகு ஏற்றுமதி இந்த அசோவ் கடல் துறைமுகங்கள் வழியாகவே நடக்கிறது.

குறிப்பாக ரஷியா தனது நாட்டின் ஒட்டுமொத்த கோதுமை ஏற்றுமதியில் சுமார் 25 சதவீதத்தை இதன் வழியாகவே உலக நாடுகளுக்கு அனுப்பி வைக்கிறது.

சர்வதேச கோதுமைச் சந்தையில் 20 சதவீத பங்கைக் கொண்டு, உலகின் மிகப்பெரிய கோதுமை ஏற்றுமதியாளராக ரஷியா திகழ்கிறது.

தற்போதைய கப்பல் போக்குவரத்து முடக்கத்தால் சர்வதேச சந்தையில் கோதுமைக்கான வர்த்தக விலை ஏற்கனவே உயரத் தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது. இந்தத் முற்றுகை நீடித்தால் ரஷியாவுக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்படும் என கணிக்கப்படுகிறது.

மாற்றுப் பாதையாக கருங்கடல் துறைமுகங்களை ரஷியா பயன்படுத்த நினைத்தாலும், அறுவடைக் கால ஏற்றுமதியை தாங்கும் கொள்ளளவு அந்தத் துறைமுகங்களுக்கு இல்லை எனக் கூறப்படுகிறது.

உக்ரைன் தற்போது ரஷியாவின் விநியோகச் சங்கிலியை உடைக்கும் வியூகத்தைக் கையில் எடுத்துள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியா தீபகற்பத்தை ரஷியாவின் பிரதான நிலப்பரப்பில் இருந்து தனிமைப்படுத்துவதும், அசோவ் கடல் வழியாக நடக்கும் ரஷியாவின் வர்த்தக ஏற்றுமதியை முடக்கி அதன் பொருளாதாரத்தை நலிவடைய செய்வதும் தான் உக்ரைனின் முக்கிய நோக்கம் அசோவ் கடல் பாதையை 2003 ஒப்பந்தப்படி ரஷியா – உக்ரைன் நாடுகள் பகிர்ந்து வந்தன.

ஆனால், 2014 இல் கிரிமியாவை ரஷியா கைப்பற்றியதில் இருந்து சர்ச்சை எழுந்தது. 2022 முழு அளவிலான போருக்குப் பின் இதனை ரஷியாவுக்கு சொந்தமான கடல் என அதிபர் புதின் வெளிப்படையாக அறிவித்தார்.

# ஹார்முஸ் நீரிணை வழியாக செல்லும் கப்பல்களில் இந்திய மாலுமிகளை பணியமர்த்த தடை!



புதுடெல்லி, ஜூலை. 16–

தாக்குதல்கள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, ஹார்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் கப்பல்களில் இந்திய மாலுமிகளைப் பணியமர்த்து வதை நிறுத்துமாறு கப்பல் உரிமையாளர்கள், கப்பல் மேலாளர்கள் மற்றும் ஆள்சேர்ப்பு முகமைகளுக்கு இந்தியா உத்தரவிட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, "அடுத்த உத்தரவு வரும் வரை" இந்த நீர்வழிப் பாதையில் பயணிக்கும் கப்பல்களில் இந்திய மாலுமிகள் பணியமர்த்தப்படக் கூடாது என்று கப்பல் போக்குவரத்துக்கான தலைமை இயக்குநரகம் (Directorate–General of Shipping) நேற்றிரவு தனது 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான அந்த பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:–

ஹார்முஸ் நீரிணை பாரசீக வளைகுடாவை உலகளாவிய சந்தைகளுடன் இணைக்கிறது. அமைதிக் காலங்களில், இது தினசரி உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் சுமார் ஐந்தில் ஒரு பங்கைத் தாங்கிச் செல்லும் முக்கியப் பாதையாகத் திகழ்ந்தது. இந்த நீர்வழியின் கட்டுப்பாட்டை கைப்பற்றுவதில் ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே போட்டி நிலவுகிறது.

வளைகுடாப் பகுதியில் அதிகரித்துள்ள பாதுகாப்புச் சூழலைக் கருத்தில் கொண்டு, கடல்சார் நிர்வாக இயக்குநரகம் (DGMA) தனது சுற்றறிக்கை எண் 36/2026–இன் மூலம், கப்பல் உரிமையாளர்கள், கப்பல் மேலாளர்கள் மற்றும் RPSL நிறுவனங்களுக்கு ஒரு முக்கிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அதன்படி, அடுத்த உத்தரவு வரும் வரை, ஹார்முஸ் நீரிணை வழியாகப் பயணம் மேற்கொள்ளும் கப்பல்களில் இந்தியக் கடல்சார் பணியாளர்களை (seafarers) பணியமர்த்துவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முக்கிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

– அடுத்த உத்தரவு வரும் வரை, ஹார்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் கப்பல்களில் இந்தியக் கடல்சார் பணியாளர்களைப் பணியமர்த்தக் கூடாது.

– பாரசீக வளைகுடா, ஹார்முஸ் நீரிணை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளில் பாதுகாப்புக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும்.

– வழிசெலுத்தல் தொடர்பான எச்சரிக்கைகள் மற்றும் பாதுகாப்பு ஆலோசனைகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்; அத்துடன் ISPS விதிமுறைகளை (ISPS Code) கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும்.

– அவசர காலங்களில் IFC–IOR மற்றும் DG தகவல் தொடர்பு மையம் (MMDAC) ஆகியவற்றின் மூலம் உடனடியாகத் தகவல் தெரிவிக்கவும், உதவிகளைப் பெறவும் வேண்டும்.

மாறிவரும் பாதுகாப்புச் சூழலை DGMA தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது; மேலும், இந்தியக் கடல்சார் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதில் உறுதியுடன் உள்ளது

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், சமீபத்திய நாட்களில் அப்பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் கப்பல்கள் மீது தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் இந்திய மாலுமிகள் கொல்லப்பட்ட சம்பவமும் அடங்கும்.

வணிகக் கப்பல்களுக்கு இந்த முக்கிய நீர்வழிப் பாதை (choke–point) தற்போது மிகவும் ஆபத்தானதாக உள்ளது என்று சர்வதேச கடல்சார் அமைப்பு (International Maritime Organisation) எச்சரித்துள்ளது. வர்த்தகக் கப்பல்களில் 3,10,000–க்கும் மேற்பட்ட இந்திய மாலுமிகள் பணிபுரிகின்றனர். இதன் மூலம் மாலுமிகளை வழங்கும் நாடுகளில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாக திகழ்கிறது என்று வர்த்தக அமைப்பான BIMCO மற்றும் சர்வதேச கப்பல் போக்குவரத்துச் சங்கம் (International Chamber of Shipping) ஆகியவற்றின் மதிப்பீடு தெரிவிக்கிறது.

உலகின் முன்னணி மாலுமிகள் வழங்கும் நாடான பிலிப்பைன்ஸ், தனது குடிமக்களை பாரசீக வளைகுடா பகுதிக்கு அனுப்புவதை நிறுத்துமாறு முகமைகளுக்கு உத்தரவிட்டு பணியாளர் பற்றாக்குறையை அதிகரித்திருந்தது. அந்த நடவடிக்கையை ஒத்ததாகவே இந்தியாவின் இந்த நடவடிக்கையும் அமைந்துள்ளது.

ஓமன் கடற்பகுதியில் கடந்த 12–ந்தேதி ஈரானின் தடையை மீறி ஹார்முஸ் நீரிணை கடந்து சென்ற சைப்ரஸ் நாட்டின் ஜி.எப்.எஸ். கேலஸ்சி என்ற கப்பல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதில் அந்த கப்பலில் இருந்த இந்திய மாலுமிகள் உள்ளிட்ட 23 பேர் கடலில் குதித்தனர். அவர்களில் 10 இந்திய மாலுமிகள் உள்பட 22 பேர் மீட்கப்பட்டனர். ஒரு இந்திய மாலுமி மாயமானார்.

ஓமன் கடற்பகுதியில் மாயமான இந்திய மாலுமியை தேடும் பணி தீவிரமாக நடந்து வந்தநிலையில் அவர் பிணமாக மீட்கப்பட்டார். அவர் மராட்டிய மாநிலம் புனேயை சேர்ந்த ஹெராம் கர்மார்கர் (வயது 30) என்று தெரியவந்துள்ளது. இதேபோல ஓமன் கடற்பகுதி வழியாக ஹார்முஸ் நீரிணையை கடக்க முயன்ற 2 அமீரக கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதில் ஒரு இந்திய மாலுமி உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வேலை வாய்ப்பு

## பேங்க் ஆஃப் இந்தியா ஆட்சேர்ப்பு: 779 பணியிடங்கள்!

அமைப்பின் பெயர்: பேங்க் ஆஃப் இந்தியா (Bank of India)
அறிவிப்பு எண்: 2026–27/01 (01.06.2026)
பணிவகை: மத்திய அரசு வேலை
பணியமர்த்தல் முறை: நிரந்தர பணி (Regular Basis)
மொத்த காலிப்பணியிடங்கள்: 779
பணியின் பெயர்: கிரெடிட் அதிகாரி (Credit Officer GBO Stream)
பணியிடம்: இந்தியா முழுவதும்
ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கும் தேதி: 30.06.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 20.07.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் – https://bankofindia.bank.in/
அதிகாரப்பூர்வ இணையதளம்: பேங்க் ஆஃப் இந்தியா

இந்த ஆட்சேர்ப்பின் மூலம் GBO (General Banking Officer) பிரிவில் Credit Officer பணிகளுக்காக மொத்தம் 779 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. தகுதியும் அனுபவமும் உள்ளவர்கள் 20 ஜூலை 2026–க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

# தமிழ்நாட்டில் பல்வேறு ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து அரசு உத்தரவு!




சென்னை, ஜூலை. 16–

பொது மற்றும் மறுவாழ்வுத் துறையின் சிறப்புச் செயலாளராக இருக்கும் சுந்தரவல்லி, இடமாற்றம் செய்யப்பட்டு, காகர்லா உஷாக்குப் பதிலாக, பொது மற்றும் மறுவாழ்வுத் துறையின் செயலாளராக நியமிக்கப்படுகிறார். தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநராக இருக்கும் நிர்மல் ராஜ், இடமாற்றம் செய்யப்பட்டு, வள்ளாலாருக்குப் பதிலாக, போக்குவரத்துத் துறையின் செயலாளராக நியமிக்கப்படுகிறார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக இருந்த உமாநாத், தொழில்துறை ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநராக நியமிக்கப்படுகிறார்.

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன ஆணையராக சுப்ரியா சாஹூ நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவராக ராதாகிருஷ்ணனுக்குப் பதிலாக அருண் ராய் நியமனம். ராதாகிருஷ்ணன் அண்ணா நிர்வாக கல்லூரி இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்து அறநிலையத்துறையின் ஆணையராக ரத்னா நியமிக்கப்பட்டுள்ளார்.

# 100-க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் விலகல்.. ராஜினாமா விதிகளை கடுமையாக்கிய இஸ்ரோ!

புதுடெல்லி, ஜூலை. 16–

இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகமான இஸ்ரோவில் ஒரே ஆண்டில் 120 விஞ்ஞானிகள் ராஜினாமா செய்துள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த இஸ்ரோ ராஜினமா செய்வதற்கான விதிகளை கடுமையாக்கியுள்ளது.

தகவல்களின்படி, இஸ்ரோவி லிருந்து கடந்த சில மாதங்களில் மட்டுமே 100 முதல் 120 விஞ்ஞானிகள் வரை விலகியுள்ளனர். இஸ்ரோவில் உள்ள 14,600க்கும் மேற்பட்டோர் தற்போது பணியாற்றி வருகின்றனர். இந்த எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது ராஜினாமாக்களின் எண்ணிக்கை சிறியதாகத் தெரியலாம்.

ஆனால் ராஜினாமா செய்தவர்கள் அனைவரும் ககன்யான், சந்திராயன் உள்ளிட்ட திட்டங்களில் முக்கியமான பங்காற்றியவர்கள் என்பதுதான் கவலையளிக்கும் விஷயமாக மாறியுள்ளது. இஸ்ரோவின் மிகப்பெரிய மையமான விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் மட்டும் சுமார் 20 பேர் விலகியுள்ளனர். இதில் இந்தியாவின் எல்விஎம்3 ராக்கெட் திட்ட இயக்குநர் விக்டர் ஜோசப் அடங்குவார்.

யு.ஆர். ராவ் செயற்கைக்கோள் மையத்தில் இங்கிருந்து சுமார் 80 விஞ்ஞானிகள் வரை ராஜினாமா செய்துள்ளனர்.

இதில் விண்வெளித் துறைக்கான 'ஸ்பாடெக்ஸ்' திட்ட இயக்குநர் மற்றும் சந்திரயான்3 திட்டத்தில் முக்கியப் பங்கு வகித்த இளம் விஞ்ஞானிகள் அடங்குவர்.

சந்திரயான் 3 விண்கலம் நிலவில் இறங்குவதை கண்காணிக்கும் குழுவின் திட்ட மேலாளராக இருந்த ஆதித்யா ரல்லபள்ளி என்பவரும் ராஜினாமா செய்துள்ளார்.

இவர் தான் பலகட்ட சோதனைகளை மேற்கொண்டு விண்கலம் தரையிறங்குவதை உறுதி செய்தவர்.

இஸ்ரோவில் 2012 முதல் 2024 வரை சுமார் 700 ஊழியர்கள் ராஜினாமா செய்துள்ளனர்.



இஸ்மாயில் லக்கி
டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் புதிய தலைவராக பணீந்திர ரெட்டி நியமனம்!




புதுடெல்லி, ஜூலை. 16–

தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் புதிய தலைவராக ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி கே. பணீந்திர ரெட்டி நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருடன் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஏ. நசீர் அகமது மற்றும் ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி ரீட்டா ஹரிஸ் தக்கர் ஆகியோர் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் அண்மைக்கால ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, TNRERA அமைப்பில் இருந்த முந்தைய பொறுப்பாளர்கள் தங்களது பதவிகளை ராஜினாமா செய்தனர்.

முன்னதாக தலைவராக இருந்து ஓய்வுபெற்ற முன்னாள் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உறுப்பினர்களான எல். சுப்பிரமணியன், டி. ஜெகநாதன் உள்ளிட்டோர் அண்மையில் தங்களது பதவிகளிலிருந்து விலகினர்.

அனைத்து உறுப்பினர்களும் ஒரே நேரத்தில் விலகியதால், புதிய வீட்டுத் திட்டங்களுக்கு அனுமதி அளிப்பதிலும், நுகர்வோர் வழக்குகளை விசாரிப்பதிலும் முடக்கம் ஏற்பட்டது.

இதன் காரணமாக தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இல்லாததால், ரியல் எஸ்டேட் சட்டம் 2016–இன் கீழ் இந்த ஆணையம் தனது சட்டப்பூர்வ கடமைகளைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. சட்டத்தின் பிரிவு 82–ஐப் பயன்படுத்தி, தற்போதைய TNRERA அமைப்பை 6 மாத காலத்திற்கு தற்காலிகமாக முடக்கி, அதற்குப் பதிலாக இந்த புதிய குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.

இந்த புதிய குழு அடுத்த 6 மாதங்கள் வரை அல்லது புதிய நிரந்தர ஆணையம் மாற்றி அமைக்கப்படும் வரை, TNRE–RA–வின் முழு அதிகாரங்களையும் பயன்படுத்தி வழக்குகளை விசாரிக்கும். 1990–ஆம் ஆண்டு பேட்ச் ஐ.ஏ.எஸ் அதிகாரியான பணீந்திர ரெட்டி, 35 ஆண்டுகள் அரசுப் பணியாற்றி கடந்த 2025 ஆகஸ்ட் மாதம் ஓய்வு பெற்றார். அவர் தனது பணிக்காலத்தில் உள்துறை, நிதித்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல் துறை போன்ற மிக முக்கிய துறைகளின் முதன்மைச் செயலாளராகப் பணியாற்றி நீண்ட நிர்வாக அனுபவம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 9-ம் வகுப்பில் மும்மொழியை அமல்படுத்த வேண்டாம் என்று உச்ச நீதிமன்ற நீதிபதி வலியுறுத்தல்!

டெல்லி, ஜூலை. 16–

9ம் வகுப்பில் மும்மொழியை அமல்படுத்த வேண்டாம் என நவோதயா பள்ளிகள் தொடர்பான வழக்கு விசாரணையின்போது உச்ச நீதிமன்ற நீதிபதி நாகரத்னா, ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தியுள்ளனர். 8ம் வகுப்பு இறுதியிலேயே மாணவர்களுக்கு பொதுத்தேர்வு அழுத்தம் தொடங்கி விடுகிறது. 6ம் வகுப்பில் 3வது மொழியை தொடங்கி 8ம் வகுப்புடன் முடித்து விட வேண்டும். 9ம் வகுப்பில் புதிய மொழியை பயிற்றுவிக்க வேண்டாம். 1976ல் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தில் இருந்து கூறுகிறேன். 9ம் வகுப்பில் மும்மொழி என்பது மோசமானது என்றும் கூறியுள்ளார்.

# லிபியா அருகே அகதிகள் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்து.. 50 பேர் மாயம்!



லிபியா, ஜூலை. 16–

வட ஆப்பிரிக்க நாடான லிபியா அருகே மத்திய தரைக்கடலில் 60 அகதிகள் சென்ற படகு கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு சுமார் 60 அகதிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட படகு கடந்த செவ்வாய்க்கிழமை லிபியாவின் கிழக்குக் கடலோர நகரான தோப்ருக் அருகே உள்ள பர்தா தீவுக்கு அருகே கவிழ்ந்து விபத்து நேரிட்டுள்ளது. இதில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்படக் குறைந்தது 50 பேர் உயிரிழந்துள்ளனர் அல்லது மாயமாகியுள்ளனர் என்று லிபிய கடலோரக் காவல் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்கள் உயிரோடிருக்க வாய்ப்பில்லை என கூறப்படுகிறது.

விபத்தில் சிக்கியவர்களில் 10 பேர் மட்டும் எப்படியோ நீந்திப் பர்தா தீவை அடைந்து உயிர் தப்பினர்.

கடலில் மூழ்கிய மற்ற அகதிகளைத் தேடும் பணிகளை லிபியக் கடலோரக் காவல் படையினர் தொடர்ந்து தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் புதிய வாழ்வை தேடி மத்திய தரைக்கடலைக் கடக்க முயலும் அகதிகளுக்கு, லிபியா தொடக்கப் புள்ளியாக உள்ளது.

கடந்த 2011ல் நேட்டோ ஆதரவு பெற்ற புரட்சியின் மூலம் லிபியாவின் நீண்டகால அதிபரான கடாபி வீழ்த்தப்பட்டு கொல்லப்பட்டார்.

அதன்பின்னர், அங்கு நிலவி வரும் அரசியல் குழப்பங்களையும் உள்நாட்டுக் கலவரங்களையும் கடத்தல்காரர்கள் சாதகமாக்கிக் கொண்டுள்ளனர். ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வறுமை மற்றும் போர் காரணமாக ஓடிவரும் அகதிகளை ஐரோப்பாவிற்கு அனுப்பும் முக்கிய மையமாக லிபியாவை மாற்றியுள்ளனர்.

அதிக பணத்தைப் பெற்றுக்கொண்டு, தகுதியற்ற மற்றும் மிகவும் பலவீனமான சிறிய படகுகளில் நூற்றுக்க ணக்கான அகதிகளை அடைத்து அனுப்புகின்றனர். இதனால் கடல் பயணத்தின்போது அடிக்கடி விபத்துகள் நேரிட்டு ஆயிரக்கணக்கானோர் பலியாகின்றனர்.



## இன்றைய கார்ட்டூன்




# டி20 உலகக் கோப்பை: அதிரடி மாற்றம்!



புதுடெல்லி, ஜூலை. 16–

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) 2027–ம் ஆண்டு 50 ஓவர் உலகக் கோப்பை மற்றும் 2028–ம் ஆண்டு டி20 உலகக் கோப்பை போட்டிகளின் வடிவமைப்பில் முக்கிய மாற்றங்களை அறிவித்துள்ளது.

2027 50 ஓவர் உலகக் கோப்பை

தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் தொடரில் 14 அணிகள் பங்கேற்கும்.

சூப்பர் சீரிஸ், குரூப் சுற்று, சூப்பர்–7, அரையிறுதி, இறுதிப்போட்டி என புதிய வடிவில் போட்டிகள் நடைபெறும்.

குரூப் சுற்றில் 12 அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மோதும்.

சிறந்த 7 அணிகள் சூப்பர்–7 சுற்றுக்கு முன்னேறி, அதிலிருந்து 4 அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

2028 டி20 உலகக் கோப்பை

முந்தையபடி 20 அணிகள் பங்கேற்கும்.

5 பிரிவுகள், ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம்பெறும்.

முதல் இரண்டு இடங்களைப் பெறும் 10 அணிகள் சூப்பர்–10 சுற்றுக்கு முன்னேறும்.

ஐபிஎல் பாணியில் எலிமினேட்டர் சுற்று அறிமுகப்படுத்தப்படுகிறது.

எலிமினேட்டர் வெற்றியாளர்கள் அரையிறுதிக்குத் தகுதி பெற்று, பின்னர் இறுதிப்போட்டி நடைபெறும்.

**முக்கிய அம்சம்:**

போட்டித் தரத்தை உயர்த்தவும், விறுவிறுப்பை அதிகரிக்கவும் ICC புதிய சுற்று முறைகள் மற்றும் எலிமினேட்டர் வடிவத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

# இந்தியாவில் விரைவில் பறக்கும் பேருந்துகள்!




சென்னை, ஜூலை. 16–

நகரங்களில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக, பறக்கும் பேருந்துகள் (Sky Bus / Aerial Pod Taxi) சேவையை இந்தியாவில் அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதை மத்திய அமைச்சர் நிதின் கட்கரிஅறிவி த்துள்ளார். இந்த சேவை மின்சாரத்தில் இயங்கும் நவீன போக்குவரத்து முறை யாக இருக்கும். சாலைக ளுக்கு மேலே அமைக்கப்படும் தனி பாதையில் இயங்கு வதால், போக்குவரத்து நெரிசலை குறைத்து விரைவான பயணத்தை வழங்கும் என எதிர்பார்க்க ப்படுகிறது. மேலும், டீசல் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்துக்கு வழிவகுக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. தொழில்நுட்பம் மற்றும் கட்டமைப்பு வசதிகள் உருவா க்கப்பட்ட பிறகு திட்டம் செயல்படுத்தப்படும் என கூறப்பட்டுள்ளது.

# 2026 ஜூலை 17 வானில் நிகழும் அற்புதம்!

**சந்திரன் – வியாழன் – வெள்ளி அருகருகே தோன்றும் அரிய காட்சி**




**எடின்பர்க்:** வானியல் ஆர்வலர்களுக்கு 2026 ஜூலை 17 ஆம் தேதி ஒரு மறக்க முடியாத நாளாக அமைந்துள்ளது. அந்த நாளில், சந்திரன், வியாழன் மற்றும் வெள்ளி கிரகங்கள் ஒரே நேரத்தில் வானில் அருகருகே தோன்ற உள்ளன.

அதாவது, மூன்று விண்ணியல் பொருட்கள் ஒரே நேரத்தில் ஒரே கோட்டில், மிக அருகில் காணப்படும். இது 'மூன்று விண்மீன் சேர்க்கை' (Triple Conjunction) என அழைக்கப்படுகிறது.

இந்த அற்புதக் காட்சியை விடியற்காலை 4.30 முதல் 5.30 மணி வரை கிழக்கு திசையில் பார்க்க முடியும். நகர விளக்குகள் குறைவாக உள்ள பகுதிகளில், இந்த நிகழ்வு தெளிவாகத் தெரியும் என்று வானியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்திரனின் மெல்லிய பிறை, அதன் அருகில் பிரகாசமாகத் தோன்றும் வெள்ளி கிரகம், சற்று மேல்புறத்தில் மின்னும் வியாழன் கிரகம் ஆகிய மூன்றும் சேர்ந்து வானில் அற்புத காட்சி அளிக்கும்.

இந்த நிகழ்வு உலகம் முழுவதும் காணக்கூடியது. வானியல் ஆர்வலர்கள், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பை தவறவிட வேண்டாம்.

**எப்போது, எங்கே பார்க்கலாம்?**

- **தேதி:** 17 ஜூலை 2026, வெள்ளிக்கிழமை
- **நேரம்:** அதிகாலை 4.30 – 5.30 மணி
- **திசை:** கிழக்கு
- **இடம்:** நகர விளக்குகள் குறைவான திறந்த வெளிப்பகுதிகள்

**வானத்தை நோக்குங்கள்... அற்புதத்தை ரசிக்குங்கள்!**

**ஜூலையில் இதர முக்கிய வானியல் நிகழ்வுகள்**

- ஜூலை 14 : சந்திரன் – சனி இணைவு
- ஜூலை 17 : சந்திரன் – வியாழன் – வெள்ளி மூன்று கிரக சேர்க்கை
- ஜூலை 21 : சந்திரன் – செவ்வாய் இணைவு
- ஜூலை 29 : சந்திரன் – புதன் இணைவு




**குறிப்பு:** மேகமில்லாத வானில் இந்த நிகழ்வுகள் சிறப்பாகத் தெரியும். வானியல் ஆர்வலர்கள் தொலைநோக்கி அல்லது பயணம் மூலம் இன்னும் தெளிவாக பார்க்கலாம்.

பழனி கல்வி மாவட்டத்தில்

# 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு விழா!



பழனி ஜூலை 16–

பழனி கோட்டைமேட்டு தெருவில், விசுவாசம் அறக்கட்டளை சார்பில் பழனி மாவட்டத்தில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கும், பழனி 25 வது வார்டில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பாராட்டு விழாவும், சத்திரப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர் செந்தில் கணேசனுக்கு பாராட்டு விழாவும், மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கும் விழாவும், முப்பெரும் விழா நடைபெற்றது. இதற்கு 25 வது வார்டு கவுன்சிலர் ஜன்னத்துல் பிர்தௌஸ் தலைமை வகித்தார். விசுவாசம் அறக்கட்டளை தலைவர் எம்இகே ராஜாமுகமது முன்னிலை வகித்தார். அறக்கட்டளை செயலாளர் ஜியாவு வரவேற்றார். இதில் அதிமுக நகர செயலாளர் முருகானந்தம், காணியாளர் பண்ணாடி ராஜா, ராஜாக்கனி நாடார், டாக்டர் பிரவீன் குமார் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.



திருப்பூர் மாவட்ட மீன் வியாபாரிகள் நல சங்கத்தின் மாவட்ட தலைமை அலுவலகத்தில் கர்மவீரர் கல்வி கண் திறந்த காமராஜரின் 124 பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட தலைவர் சு பார்த்த சாரதி முன்னிலையில் மாவட்ட செயலாளர் கோடை சே அப்துல் காதர் கர்மவீரர் காமராஜர் படத்திற்க்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார் உடன் மாவட்ட அவைத்தலைவர் கே முகமது அலி மாவட்ட பொருளாளர் முத்து மாவட்ட செயற்குழு தேவேந்திரன் கனேசமூர்த்தி உடனிருந்தனர்.

# தமிழக வெற்றிக்கழகம் புதிய அலுவலகம் திறப்பு விழா!



ஒட்டன்சத்திரம். ஜூலை, 16–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியம், புளியமரத்துக்கோட்டை ஊராட்சியில் தமிழக வெற்றி கழக அலுவலகத்தை முன்னாள் ஒன்றிய குழு தலைவர் கே.பி. நல்லசாமி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் சீனிப் பாண்டி, நித்தியானந்தம், சாந்தி,கே.சுப்பிரமணி, டாக்டர்.எம்.முத்து, எஸ்.கே.கருப்பசாமி, அம்மாமெஸ் செல்வம்,மூர்த்தி, சேனாதிபதி, செல்லத்துரை, சண்முகவடிவேல், வெள்ளைத்தாய், ராஜ்குமார்,ஸ்ரீராம், அருள்முருகன், வேல்முருகன், சிவக்குமார், கல்யாண பிரபு, மணிகண்டன் மற்றும் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பழனியில் காமராஜரின் பிறந்தநாள் விழா!



பழனி, ஜூலை 16–

பழனி தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக கட்சி அலுவலகத்தில் காமராஜரின் 124 வது பிறந்தநாள் விழாவில் அவரின் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. தொடர்ந்து அடிவாரம் சரவணப் பொய்கை அருகே உள்ள திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு நகரத் தலைவர் ஆர் சண்முகநாதன் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநிலச் செயலாளர் மணிக்கண்ணன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட தலைவர் ராசியப்பன், மாநில செயற்குழு உறுப்பினர் கனகசபாபதி, பி டி சி நாகராஜன், வட்டாரத் தலைவர்கள் சுந்தர்ராஜன், ராஜேந்திரன், மற்றும் நாகேஸ்வரன், பாலசுப்பிரமணியம், மாவட்ட இளைஞர்அணி தலைவர் சுந்தரபாண்டியன், நகரத் துணைத் தலைவர் திருஞானசம்பந்தம், நகர செயலாளர் கோபால், மாரியப்பன், நகர பொருளாளர் பாஸ்கரன், ஆயக்குடி பேரூர் தலைவர் நாட்டுத்துரை, நெய்க்காரப்பட்டி பேரூர் தலைவர் சண்முகவேல், மாவட்ட செயலாளர் அருண், வீரபாண்டி, கீரனூர் பேரூர் தலைவர் காட்டப்பன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சிவசுப்பிரமணியம், ரூக்வார்பட்டி செல்வம், பெத்தநாயக்கன்பட்டி சண்முகசாமி மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




# இந்த தயாரிப்பு பொருட்களுக்கு தடை!




புதுடெல்லி, ஜூலை. 16–

இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில் (FTP–2023) மத்திய அரசு முக்கிய திருத்தம் செய்து, கட்டாய அல்லது அடிமைத் தொழிலாளர் மூலம் தயாரிக்கப்படும் பொருட்களை இந்தியாவுக்கு இறக்குமதி செய்ய தடைவிதித்துள்ளது. இந்த புதிய விதி, மத்திய அரசின் கெஜெட் அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன், 30 நாட்களுக்குள் நடைமுறைக்கு வர உள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) Forced Labour Convention, 1930–க்கு ஏற்ப இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. இதன் மூலம் மனித உரிமை மீறல்களுடன் தயாரிக்கப்படும் பொருட்கள் இந்திய சந்தைக்குள் நுழைவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில், கட்டாய தொழிலாளர் முறையில் தயாரிக்கப்படும் பொருட்கள் தொடர்பாக இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் மீது அமெரிக்கா கேள்வி எழுப்பியிருந்தது. இதையடுத்து, சர்வதேச வர்த்தகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு இந்த விதிமாற்றத்தை கொண்டு வந்துள்ளது.

புதிய விதியின்படி, எந்த ஒரு நாட்டையும் தனிப்பட்ட முறையில் குறிவைத்து உடனடி இறக்குமதி தடை விதிக்கப்படாது. ஆனால், கட்டாய தொழிலாளர் முறையில் தயாரிக்கப்பட்டதாக உறுதி செய்யப்பட்ட பொருட்களுக்கு இந்திய சந்தையில் அனுமதி வழங்கப்படாது. இதன் மூலம் சர்வதேச வர்த்தக விதிமுறைகளை பின்பற்றுவதோடு, இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் வர்த்தக நற்பெயரையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த கொள்கை மாற்றம், உலகளாவிய வர்த்தக தரநிலைகளுக்கு இந்தியா முக்கியத்துவம் அளிப்பதை வெளிப்படுத்துவதுடன், எதிர்காலத்தில் தேவையற்ற சர்வதேச வர்த்தக விசாரணைகள் மற்றும் கூடுதல் வரி நடவடிக்கைகளை தவிர்க்கவும் உதவும் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# 10 கிலோ எல்பிஜி சிலிண்டர் விரைவில் அறிமுகம்!




சென்னை, ஜூலை. 16–

தள்ளுவண்டி வியாபாரிகள், சிறு வணிகர்கள், மாணவர்கள் மற்றும் அடிக்கடி இடமாற்றம் செய்பவர்களின் பயன்பாட்டிற்காக 10 கிலோ காம்போசிட் எல்பிஜி சிலிண்டரை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளன. இந்த சிலிண்டர், தற்போதைய 19 கிலோ வணிக சிலிண்டரை விட 50% வரை இலகுவானது என்பதால் எளிதாக எடுத்துச் செல்ல முடியும்.

மேலும், சிலிண்டரில் மீதமுள்ள எரிவாயு அளவை வெளிப்புறத்திலேயே பார்க்கும் வசதியும் இடம்பெறும். விலை மற்றும் அறிமுக தேதி குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# குதிரை பேரம் விவகாரம்: சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக்கோரிய வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு!



சென்னை, ஜூலை. 16–

குதிரைபேரம் விவகாரம் தொடர்பாக எம்எல்ஏக்கள் அளித்த புகார்கள் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக்கோரிய வழக்கு மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்ற நிலையில், ஏன் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்? என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மற்ற புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதற்காக மாட்டுமே இந்த வழக்கை சிபிஐக்கு மாற்ற வேண்டுமா? என்று உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

உண்மையை கண்டறிய காவல்துறை நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் சிபிஐக்கு மாற்ற வேண்டியே தேவையில்லை என தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கம் விலை சரிவு!

சென்னை, ஜூலை. 16–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.240 குறைந்து ரூ.1,05,200–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.30 குறைந்து ரூ.13,150–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.240–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020